இலவச மின்சாரம்

*7075—திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தை ஏற்கெனவே தனியார் துறை மின் நிறுவனங்கள் இலவசமாக விநியோகம் செய்து வந்ததை அரசு மீண்டும் அனுமதிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'கேள்விக்கே இடமில்லை' என்ற பிறகு திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஓட்டல்களில் வேலை செய்பவர்கள் காலையில் காப்பி, டிபன், மத்தியானம் சாப்பாடு எல்லாம் சாப்பிடுகிறார்கள். போக்குவரத்துத் துறையிலே அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பமே ஏறிப் போகிறது. இரயில்வேயில் வேலை செய்பவர்களுக்குப் பாஸ் தருகிறார்கள். மின் வாரிய ஊழியர்களுக்கு மட்டும் சலுகை கிடையாது. அவர்களுக்கு இன்ஸ்டரீசுக்குத் தர வேண்டாம், விவசாயத்திற்குத் தர வேண்டும் டொமஸ்டிக் பர்ப்பசுக்கு மட்டும் கேட்கிறார்கள். ஏற்கெனவே பிரைவேட் அன்டர்டேங்கிங்-ஆக இருந்தபோது கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சலுகையைக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்களே, தனிப்பட்டவர்களிடமிருந்து நாம் அவற்றை எடுத்த நேரத்தில், அந்தக் கம்பெனிகளில் உள்ள சலுகைப்படி அவர்கள் 31-3-1981 வரையில் அதை அனுபவித்தார்கள் 1-4-1981. லிருந்து அரசினுடைய விதிமுறைகளுக்கு ஏற்பத்தான் செயல்பட

வேண்டியிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் ஓட்டலில் வேலை செய்பவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தான் சாப்பிட முடியும், வீட்டிலே யாரும் சாப்பிட முடியாது. ஆகையால் அதே போன்று இப்போது கொடுக்க ஆரம்பித்தால், மின்சார இலாக்காவில் ஒரு இலட்சம் பேர் வேலை செய்கிறார்கள் என்ற நிலையில், ஆண்டு ஒன்றுக்கு இதனால் 6 கோடியிலிருந்து 9 கோடி ரூபாய் வரை செலவாகும். ஆகவே, நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசு அதைச் செய்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் ஆயிரக் கணக்கிலே இலட்சக் கணக்கிலே தான் வேலை செய்கிறார்கள். சர்க்கார் துறையிலே வேலை செய்கிறார்கள், அன்டர்டேக்கிங்கில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகள் இருக்கும் போது, மின்சார வாரியத்தில் உள்ள ஊழியர்கள் என்ன பாவம் செய்தார்கள்? வீட்டில் எரியும் விளக்குக்குத்தான் கேட்கிறார்கள். ஏர்கண்டிஷனுக்கு வேண்டியதில்லை. அதை மட்டும் அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, முதலில் மின்சார இலாக்காவிற்கு வந்து, அரசு ஊழியர்களுக்கு வேண்டுமென்ற நிலைமை, கோரிக்கைகள் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே, இருக்கின்ற நிதி நிலைமையில் இப்போது அரசு இந்த முடிவில் இல்லை.

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள், அவர்கள் இந்தச் சலுகையை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அது நல்லது. ஆனால், அரசு அதை அதனுடைய சொத்தாக ஆக்கியதற்குப் பிறகு—மக்களுடைய கோரிக்கையின் பேரில் தான்—அந்தச் சலுகை கொடுப்பது சரியல்ல, ஒரு இலட்சம் பேருக்குக் கொடுக்க வேண்டி வரும் என்று சொல்கிறார்கள். இதனால் தனியார் துறையிலே இருக்கிற சில தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டால், அரசுச் சொத்தாக்கினால்தான் சில சலுகைகளை இழக்கும்படி வருமென்ற ஒரு இடத்திற்குக் கொண்டு போய்விடக்கூடாது என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மின்சார வாரிய ஊழியர்களுடைய ஒரு கோரிக்கை அரசின் முன்னால் இருக்கிறது. அவர்கள் உபயோகப்படுத்தக் கூடிய மின்சாரம் முழுவதையும் இலவசமாகக் கொடுக்காவிட்டாலும், ஒரு பகுதியை அவர்களுக்குச் சலுகையாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு உள்ளாட்சித் துறையில் வரி கட்டுவதைக் கூட அரசு ஏற்றுக்கொண்டு

9–35 மணி.

செய்யக் கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கிறது. ஆகவே, இது ஒரு சோஷியல் வெல்பேர் என்ற முறையில் இதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, திரு. ரமணி அவர்களுக்கு மின்சார இலாகாவினுடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி நன்கு தெரியும். ஆக, நிலைமைகள் முதலில் நன்கு சீர்படட்டும்; மின்சார இலாகா கடனிலிருந்து மீண்டு தன் காலில் நிற்கட்டும்; அரசினுடைய நிதிநிலையை எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிற நிலை மாறட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி சொன்ன கருத்துக்களை அரசு அப்போது பரிசீலிக்கும்.

வவ்வால் துறை அணைக்கட்டு கட்டும் திட்டம்.

*9309 திரு. எல். மூக்கையா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் தொகுதியில், கும்பக்கரை அருவிக்கு மேல் வவ்வால் துறை அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(அ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் கும்பக்கரைக்கு மேல் பாம்பாற்றில் வவ்வால்துறை அணைக்கட்டு கட்டுவதற்காக திட்டம் தற்சமயம் பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்குப் பின் திட்ட அறிக்கை கிடைத்து அரசு அதுபற்றி முடிவெடுக்கும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலையிலிருந்து வற்றாத ஜீவநதியாக பாம்பாறு நதி, கும்பக்கரை அருவி வழியாக ஓடி வீணாகிக் கொண்டிருக்கிறது. பெரியகுளம் தொகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை வவ்வால்துறை அணைத்திட்டம். அந்தப் பகுதி விவசாயத்தையே நம்பிக்கொண்டு இருக்கிற பகுதி. கிணற்றுப் பாசனம் அதிகமாக இருக்கின்ற பகுதி. ஆகவே, அரசு அந்த கும்பக்கரைக்கு மேல் வவ்வால் துறை அணைத் திட்டத்தைத் துரிதமாகக் கட்டிக் கொடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.